DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.23 /2019 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மாணிக்கம் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.ரகுபதி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 29.09.2025

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தேளூரில் வசித்து வருகிறேன். விவசாய வேலைசெய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். எனது மச்சான் தான். கடந்த 2018 வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை. இவ்வழக்கின் புகார்தாரராகியசண்முகம் எனக்கு போன் செய்து தான் தொண்டி கனரா வங்கியில் நகைகளை வைத்து பணம்எடுத்துவிட்டு பணத்தையும் சில நகைகளையும் மற்றும் சில ஆவணங்களையும் ஒரு பையில் போட்டு அந்த பையை தன் வண்டியின் இருக்கை

மற்றும் கைபிடிக்கு இடையே தொங்கவிட்டு  மேற்படி வங்கியின்வெளியே தன் வண்டியின் அருகே நின்று போன் பேசி கொண்டிருந்தபோது  இரண்டு நபர்கள் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்து தான் சற்று திரும்பி நின்ற நேரத்தில் ஒரு நபர் பையை திருட மற்றொரு நபர் தாங்கள் வந்த இருசக்கர வானத்தை தயாராக வைத்துகொண்டு காத்திருக்க மேற்படி பையை திருடிய நபர்அத்ந இருசக்கர வாகனத்தில் ஏறி சென்று விட்டதாக என்னிடம் தெரிவித்தார். நான்உடனே புறப்பட்டு சம்பவயிடத்திற்கு சென்றேன் அங்கு சண்முகம் மிகவும் மனவேதனையில் இருந்தார். அவரை ஆறுதல் படுத்தி பின் அவருடன் தொண்டி காவல்நிலையம்சென்றேன்.  அங்கு சண்முகம் புகார் அளித்தார்.  புகார்தாரர் சண்முகத்தின் இடமிருந்து பையை திருடிய நபர்களை எனக்கு தெரியாது., நான் சம்பவத்தைநேரில் பார்க்கவில்லை. சண்முகம் போன் மூலம் தகவல் தெரிவித்தன் பேரில் தான் எனக்கு சம்பவத்தை குறித்து தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார்விசாரணையிலும் சொன்னேே என்றால் சரிதான்.வழக்கு சம்மந்தமாக நான் தற்போது முதல்விசாரணையில் சொன்னதை தவிர வேறு எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம்  இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.